31st October 1958]

ended in his conviction and imprisonment for six months. The Assistant Sessions Judge, Tiruchirappalli, who tried the case did not accept this contention.

(c) Yes, Sir.

(d) The request is under the consideration of the Government.

Sri A. V. P. ASAITHAMBI : பப்ளிக் பிராசிகூட்டர் விண்ணப்பித்துக்கொண்ட மனுவின் பேரில் அரசாங்கம் யோசித்துக்கொண்டிருப்பது போன்று வெள்ளையரை எதிர்த்து அதனால் பாதிக்கப்பட்ட பரம்பரை குடும்பங்களுக்கு கஷ்டத்தைப்போக்க ஏதாவது நஷ்ட ஈடு கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் யோசனை செய்யுமா ?

Mr. SPEAKER : எந்தக் குடும்பம் ?

Sri A. V. P. ASAITHAMBI : கட்டபொம்மன் குடும்பம்.

Mr. SPEAKER : அந்தக் கேள்வி இதில் வராது. The question is out of order.

Sri S. LAZAR : இந்தக் கேள்வியில் காம்பன்சேஷனைப்பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த பப்ளிக் ப்ராசிகூட்டருக்கு முக வடிவு மாறு பட்டிருக்கிறது. அதனால் அவருக்கு ப்ளாஸ்டிக் சர்ஜரி ரண சிகிச்சை கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவர் அரசாங்கத்திற்கு ஒரு மனுகொடுத்திருக்கிறார். அந்த மனு இப்பொழுது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது.

Sri A. A. RASHEED : Since the accused have been acquitted in this case, is there any proposal to investigate the case further?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : I do not see how a case could be investigated after the Sessions Court has acquitted the accused. But the question of appeal is under examination by Law officers.

Selection Committee for the Teachers' Training Schools

*** 754 Q.—Sri P. U. SHANMUGAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இவ்வாண்டு வட ஆற்காடு மாவட்ட ஆசிரியர் பயிற்சி பள்ளிகளுக்கான தேர்வுக் குழுவில் பணியாற்றிய அங்கத்தினர்கள் பெயர்கள் யாது ?

(ஆ) இவர்களை நியமிக்கும் பொறுப்பு யாருடையது ?

(இ) எந்த யோக்யதாம்ச அடிப்படையில் இவர்கள் நியமிக்கப்படுகிறார்கள் ?

(ஈ) ஒரே அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களையே இதில் நியமித்திருப்பதற்கு காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (a) *Officials* :

(1) The District Educational Officer.

(2) The Heads of the Institution concerned.

Non-Officials :

(1) Sri P. Ramachandran, M.L.A.

(2) Sri T. Manavalan, Gudiyatham.

(3) Sri P. S. Tirugnanasambanda Mudaliar.

[31st October 1958

(*b*) Government nominate the non-official members of the Committee on the recommendation of the Director of Public Instruction.

(*c*) Persons interested in Basic Education are selected and nominated.

(*d*) The political leaning of the persons concerned is not the criterion for selecting members.

Sri P. U. SHANMUGAM: இதற்கு அரசியல் காரணங்களைக்கொண்டு உறுப்பினர்களை நியமிக்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களை நியமித்திருப்பதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இதிலே அங்கத்தினர்களை நியமிக்கும்போது, அவர்கள் ஆதாரக் கல்வியிலே நம்பிக்கை உடையவர்களாகவும், அதிலே அக்கறை எடுத்துக்கொள்பவர்களாகவும் இருக்கவேண்டும். வட ஆற்காடு மாவட்டத்தில் ஆதாரக் கல்வி சம்பந்தமாக இக்குழுவில் அங்கத்தினர்களாக நியமிக்கப்பட்டவர்கள் அதிகமான அக்கறை எடுத்துக் கொண்டதினால் ஒரு சமயம் டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன் இவர்களைச் சிபார்சு செய்திருக்கலாம்.

Sri T. KARIA GOUNDER: அதிலே நியமிக்கப்பட்ட மெம்பர்களில் ஒருவராகிய ஸ்ரீ பி. எஸ். திருஞானசம்பந்த முதலியார் அவர்கள் கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM: அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது எனக்குத் தெரியாது.

Sri K. ANBAZHAGAN: இப்படிப்பட்ட கல்வித் துறையில், பொதுவாக அந்தந்த மாவட்டத்திலேயுள்ள, அந்தந்த வட்டாரத்திலேயுள்ள எம்.எல்.ஏ.க்களை இடம் பெறுமாறு செய்வதில் அரசாங்கம் அக்கறை காட்டக் கூடாதா ? அவர்கள் போதுமான அளவு பொதுமக்கள் பிரதிநிதிகளாக அந்தக் குழுவில் இடம் பெறச்செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM: இரண்டு எம்.எல்.ஏ.க்களை அக்குழுவில் அங்கத்தினர்களாகப் போட்டிருக்கிறோம்.

Sri P. U. SHANMUGAM: ஆதாரக் கல்வியில் நம்பிக்கை உடையவர்களாகப் பார்த்து அதில் உறுப்பினர்களாகப் போட்டிருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியென்றால், அந்த மாவட்டத்தில், அக்குழுவில் இடம் பெறாத மற்றவர்கள் ஆதாரக் கல்வியில் நம்பிக்கையற்றவர்கள் என்பது சர்க்காருடைய தீர்ப்பா ?

The Hon. Sri C. SUBRAMANIAM: கனம் அங்கத்தினர் ஸ்ரீ ஏ. கோவிந்தசாமி அவர்கள் கூட தமக்கு ஆதாரக் கல்வியில் பற்று இருக்கிறது, அக்கறை இருக்கிறது என்று சொன்னார்கள். அவரைக்கூட கமிட்டியில் போட்டிருந்தோம்.

Sri A. GOVINDASAMY: ஜில்லா கல்வி அதிகாரி என்னுடைய பெயரை சிபார்சு செய்திருந்தார். டிவிஷனல் இன்ஸ்பெக்டரும் சிபார்சு செய்திருந்தார். டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனும் என்னுடைய சம்மதத்தைப் பெற்றிருந்தார். ஆனால், இடையிலே ஏற்பட்ட தகராறைத் தான் நான் கல்வி அமைச்சரிடம் சொல்லியிருந்தேன். ஆகவே, கல்வி அமைச்சர் அவர்கள் நான் அவரிடம் சொல்லாததை நான் சொன்னதாகத் தவறுதலாகச் சொல்லி இங்கே பரிகாரம் தேடவேண்டாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

31st October 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் கோவிந்தசாமி அவர்கள் என்னிடம் வந்து, அவருக்கு ஆதாரக் கல்வியில் நம்பிக்கையும் அக்கறையும் இருப்பதைப்பற்றிச் சொன்னதை இங்கே சொன்னேன். "எனக்கும் ஆதாரக் கல்வியில் நம்பிக்கை இருக்கிறது ; ஆகையால், என்னுடைய பெயரையும் போடவேண்டும்" என்று அவர் சொன்னார். அதற்குப் பிற்பாடுதான் அவரை அந்தக் கமிட்டியில் போட்டேன்.

Radio sets in private buses

* 755 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have banned the installation of radio sets (broadcasting-receiving sets) in the buses operated by private agencies; and

(*b*) if so, the reasons for the same?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The ban has been imposed to prevent accidents, as the music from the radio sets installed therein diverts the attention of the drivers, from driving, thereby giving room for accidents.

SRI K. VINAYAKAM : Sir, will the Government consider the possibility of fixing opaque, sound-proof material just between the driver and the passengers so that the noise of the music will not deter the attentive driving of the drivers? This is necessary because the uneasiness caused by travel in crowded buses where passengers are packed like Sardines, will be relieved by this to a greater extent.

THE HON. SRI V. RAMAIAH : The noise of the music will add to the aggravation of the diversion and therefore I do not accept it on principle.

Caste Abolition Campaign

* 756 *Q.*—SRI M. P. SARATHI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திராவிட கழகத்தினர் நடத்திய சாதி ஒழிப்புப் போராட்டத்தில் சிறை சென்று சிறையிலேயே உயிர் நீத்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) நோயின் காரணமாக தண்டனைக் காலம் முடியும் முன் விடுதலை செய்யப்பட்டவர்கள் எவ்வளவு பேர் ?

(இ) சிறையில் நோய்வாய்ப்படக் காரணம் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) One.

(*b*) Sixty-four.

(*c*) The reasons for their falling ill were their poor health even on admission into the Jail and the sudden change in their diet after admission.